

# எனக்கொரு நாடு

## ஏட்டில் ஒரு கவியரங்கம்


தலைமை

**கவிநாயகர் வி.கந்தவனம்**

**தொகுப்பு: எஸ்.ஜெகதீசன்**




உ



# எனக்கொரு நாடு

## ஏட்டில் ஒரு கவியரங்கம்

தலைமை

கவிநாயகர் வி.கந்தவனம்

தொகுப்பு

எஸ்.ஜெகதீசன்

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்

கனடா



**எனக்கொருநாடு**

*1993 ம் ஆண்டு கனடாவில் பொதிகை சஞ்சிகையின் ஏப்ரல் மாத இதிழிலிருந்து ஆவணமாக்கும் நோக்கில் 2023 ம் ஆண்டு நூலுருவாகின்றது.*

*வெளியிட்ட திகதி: 14.01.2023 பொங்கல் திரு நாள்.*

இலவசமாக மின் நூல் பிரதிகளை பெற்றுக் கொள்ள விரும்புவோர் S.Jegatheesan75@gmail.com என்ற மின் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா

***என்னுரை.***

கவியரங்கத்தை காதாரக் கேட்டிருப்போம்.

கண் குளிரப் பார்த்தது உண்டா?

1993 ஆண்டு சித்திரை மாத பொதிகை இதழில் 'நடை பெற்ற' கவியரங்கம் - எனக்கொரு நாடு!

கவிதைக்கும் கவிஞர்க்கும் பொதிகை தரும்
கவியரங்கை உவகையுடன் தாங்கும்
தலைமைச் சான்றோன் கந்தவனத்துடன்
கவிஞர்கள் சிவா சின்னத்தம்பி நிலா குகதாசன்
அல்பேட் மனோ என அப்பொழுது முன் நிலையில்
திகழந்த கவிஞர்களில் நால்வர் ஆர்வத்துடன் கலந்தனர்.
சிறப்பித்தனர்.

எனக்கொரு நாடு இருக்குதோ இல்லையோ
கவிக்கு மட்டும் அரங்கு ஒன்று இருந்தது புதிதாக.



மேடை இல்லை பந்தல் இல்லை ஒலிபெருக்கியின் தேவையும் இருக்கவில்லை

எனினுமென்ன வாசகர் பலர் இருந்தனர்.

வாழ்த்தும் பலமாய் அப்பொழுது இருந்தது.

எந்த வேலை எனக்கு பரிச்சயமாக இருந்ததோ அதில் புதுமை புகுத்த விரும்பியது அன்றைய மனது!

தொலைவுகள் தொலையாதிருக்க விரும்புவது இன்றைய மனது!

வாருங்கள்.
படித்திடுவோம்.
சுவைத்திடுவோம்.
விரும்பினால்...வியந்திடுவோம்

**எஸ்.ஜெகதீசன்**



# எனக்கொரு நாடு

கவியரங்கம்

தலைவர்

## கவிநாயகர் கந்தவனம்

பங்குபற்றுவோர்

கவிஞர் சிவா சின்னத்தம்பி

கவிஞர் நிலா குகதாசன்

கவிஞர் அல்பேட் மனோ

அரங்கம்

## பொதிகை இதழ்

சித்திரை 1993



# கவிநாயகர் கந்தவனம்

## கடவுள் வணக்கம்

ஆங்காரம் முடித்தருளும்
ஓங்கார வடிவழகன்
வீரகத்தி விநாயகனை
நேரிருத்திக் கவிபடைப்பேன்.

## அவையடக்கம்

நல்லவர்கள் வல்லவர்கள்
எல்லவர்க்கும் என் வணக்கம்



அதிமதுரத் தமிழ் மணக்கும்
‘பொதிகை’ எனும் மாதமலர்
ஆசிரியர் ஜெகதீசன்
வாசகர்க்கு வாய்த்தவொரு
புதிய முறைக் கவியரங்கைப்
பொதிகையிலே நடத்துகிறேன்
தலைமையினைத் தாங்குமெனக்
கலைமகளைத் தூதுவிட்டார்.

முன்பு சிலர் நேர் அரங்குக்(கு)
அன்புடனே அழைத்திருந்தும்
நேரம் ஒவ்வாக் காரணத்தால்
நேரில் நிற்க முடியவில்லை.

காலத்தினுக் கேற்றவொரு
பாலமதை அமைத்ததிரு
ஜெகதீசன் செயல்திறத்துப்
புகழ்பேசும் வருங்காலம்.



இனிக்கு மிந்த இதழ் அரங்கில்
“எனக்கொரு நாடு” எனுந் தலைப்பில்
பாவாணர் மூவர் தமிழ்
நாவாரச் சுரக்கிறது.

## செம்பு தண்ணீர்

கண்ணவரின் விண்ணமுதை
உண்ணவழைத் தன்புடனே
என்பாட்டுச் செம்பெடுந்தேன்
உம்வாயைக் கொப்புளியும்



## தலைமைக் கவிதை

எனக்கொரு நாடிருக்கு அதன்
இதயத்தில் அன்பிருக்கு
தனக்கிணை யற்றபெரும் - புகழ்
தன்மான மும் இருக்கு.

கனிநில நீர்வளமும் - காடு
கடற்படு திரவியமும்
மனமகிழ் சோலைகளும் - நிறை
வாகவே மலிந்திருக்கு.

கல்வியிற் சிறந்தவர்கள் - பல
கலைகளை அறிந்தவர்கள்
வல்லமை மிகுந்தவர்கள் - சேர்ந்து
வளர்த்திடும் வளநாடு.

அடிபிடி சண்டையில்லை கொல்லும்
ஆகாயக் குண்டுமில்லை

படைபலம் மிகுந்திருக்கு அது
பழியற்ற செயல்களுக்கு.

பல்வகைப் பண்புகளும் - ஒன்று
பட்டுழைத் தொரு குடைக்கீழ்
நல்லுற வுடன் பயிலும் - பெரு
நாகரி கமும் இருக்கு.

சுந்தர மொழியிருக்கு பல
சுதத்திர சுகமிருக்கு
அந்தரம் அச்சமில்லா - இன்ப
அமைதிநின் றாளுகுது.

சாதியைச் சமயத்தினை - வைத்துச்
சாதிக்கும் சண்டையில்லை
நீதியும் நியாயங்களும் - மனித
நேயமும் குன்றவில்லை.



தனிமகன் உரிமைகளைப் - பேணும்
தரமுள்ள அரசிருக்கு
அனைவரும் அனுவதிக்கும் - ஆன்ற
அறநெறி முறையிருக்கு.

சிக்கலை நட்புறவாய் - பேசித்
தீர்த்திடுத் திறமிருக்கு
மக்களின் கருத்துக்களை - போற்றி
மதித்திடும் மனமிருக்கு.

பகைவனுக் கும்அருளும் - வீரம்
பதவிகள் வகிக்கிறது
தகைமைக்குத் தலைவணங்கும் - சால்பு
சரித்திரம் படைக்கிறது.

வளர்ந்தநல் மரமிருக்கு - அதனால்
வளர்த்தநெஞ் சுரம்மிகுந்த
இளந்தலை முறையிருக்கு என்
எண்ணத்தை முடிப்பதற்கு.



# விருந்து

வாருங்கள் எந்தன் பாட்டால்
  வாய்தன்னைக் கழுவி விட்டுச்
சேருங்கள் பொதிகை என்னும்
  சித்திரை 'இலை' யின் முன்னால்
பாருங்கள் முதலில் உள்ள
  பாவலன் படைப்பை அன்னான்
சீரிங்கு சிறிது சொல்வேன்
  சிறந்த நெய் சேர்த்துக் கொள்வீர்!



## கவிஞர் அறிமுகம்!

திரு சிவா சின்னத்தம்பி
தீவிரக் கவிஞன் பாட்டில்
புரவியின் வேகத் தோடு
பூகம்பம் பொருளி ருக்கும்
அரியவான் சொற்கள் கூடி
ஆனந்தக் கொலு விருக்கும்
உருகுவீர் உண்டு பாரும்
உன்னதப் புலவன் ஐயா!



# கவிஞர் சிவா சின்னத்தம்பி

எங்கே எங்கே இது அங்கே!
புண்ணிய பூமி எங்கே அது பூவுலகில்
இங்கே இல்லை இல்லை அங்கே!
புங்கம் புளியடி எங்கே? அது
இங்கே! எங்கே! எங்கே! அங்கே!
என்றே இயம்புதல் என்றென்றும்
என்றோ ஒரு நாள் ஏதோ ஆகி விடும்
இன்றைய எங்கள் புதியவை
பழையதாய் புதியதாய்
புதியதும் பழையததாய்
பொதிபல கைகளில் போவதைக் கண்டு



இளையதும் முதியதாய்
முதியதும் முடைந்து - மனம்
மூவுலகையும் மறுந்து
எளியதும் இளையதாய்
இளையதும் எளியதாய்
எழுத்திடும் பூமி எங்களின் நாடு
அரும்பாகி கிளையில்
அந்தரத்தில் ஆடுது
பூமியா? பூத்தது
பூவாய் இருப்பதோ “பூம்” ஈ
பூவையும் பார் காவலில்
பாவையும் பல வரிசையில்
பூவுலகை காண பூரித்து நிற்கிறாள்
யாவையும் இன்று
யாம் அறிந்த பழையதே!
பூமியை புதிதாய் படைத்திடும் கரங்கள்
புதியதோர் பூமியை பலி



கொடுக்கவும் எடுக்கவும்
பல பலிப் படைப்புக்கள்
பதினெட்டு கடைகளில் -அதில்
புத்திஜீவியின் புரட்சி யுக்தியை
சந்தைப் படுத்தியே சக்தி இழக்கிறார்
சித்தியடைய ஜன சக்தியின்றி
சுத்தி வருகிறார்.
சொத்தியோ இவர்கள்
சித்தியின் புத்தியோ
கத்தி காயமதில் குத்தியும் பார்த்து
கொத்திக் கொள்கையில்
கத்திச் குளறவும்-வாய்களை
பொத்தி பிடித்திடும்
புதுப் புதுப் படைப்புகள்
பத்தி வைக்கிறார் பக்தியும் வைக்கிறார்
நித்திரை தூங்கினால்
நன் நாடே எரிந்திடும்
நெத்திக் கண்ணினை நித்தியம் துறந்து

நாஸ்திகம் நீக்கி நம் நாடெனும் பக்தியில்
நேசம் நினைந்து நேர்
நிமிர்ந்து நில் தமிழா
நிச்சயம் பூமிநல் நாடாய் மாறி
நம்பிக்கை பூக்கும் நல் புதிய பூமி

## தலைவர் தகவுரை

நாமோர்நாள் நன்கு வாழ
நம்பிக்கை ஊட்டுகின்றார்.
ஆமுண்டு புதிய பூமி
“அங்கு” என்றே அடித்துச் சொன்னார்
“பூமீ” யைக் கவனித்தீரா
புதுப்பொருள் வெடிவைத் தாரா
பாகான எதுகை தந்த
பாவலன் வாழ்க என்போம்!



## கவிஞர் அறிமுகம்!

பலாபலன் எதிர்பா ராது
பலவகைக் கலைத் தொண்டாற்றி
நிலாவெனச் சிரித்து வெல்வான்
நெருப்பென எரித்துக் கொல்வான்
நிலா குகதாசன் நெஞ்சில்
நிலைத்திடும் நிகரில்லாத
பலாச்சுவைக் கவிஞன் நாவில்
ஊறுதா? படியும் மேலே



# கவிஞர் நிலா குகதாசன்

நான் சொந்த மண்ணை நேசிக்கவும்
சுத்த நறுங்காற்றைச் சுவாசிக்கவும்
கற்றுத்தந்து, கவிஞனாக்கி.......
இந்த விதையின்று விருட்சமாய்
வளர்த்து நிற்க
கருவினிலே உருக்கொடுத்த
என் பெற்றோர்க்கும்........



சபை அரங்கினிலே கவிதையை
நேசிக்கும் உள்ளங்களுக்கு மட்டுமின்றி
வாசிக்கும் உள்ளங்களுக்கும்
பொதிகையிலே கவிதையை
அரங்கேற்றும் செய்கின்ற
பொதிகை ஆசிரியர்க்கும்........
இந்த அரங்கை இணைத்து வழி நடத்தும்
கந்த வனமென்கின்ற
அந்த இலக்கிய
நத்தவனத்திற்கும்.......
சாற்றுகவி பாடவெள்று இங்கு வந்து
சரமாறரிச் கவிதை பொழியும்
கூட்டுச் கவிஞர்கள் குழாத்திற்கும்......
பொங்கல் நாள் தொடங்கி திங்கள் தவறாமல்
பொதிகைச் தமிழ் படிக்கும் வாசகர்களுக்கும்....
என்வணக்கங்கள்! இனிய தமிழில்!...........
“எனக்கு ஒரு நாடு” இது கவித் தலைப்பு

செந்நெல் களனிகளும்,
செவ்வாழைத் தோப்புகளும்
என்னைச் சூழ்ந்திருக்க
இருந்ததொரு வாழ்க்கை! அன்று!

வேம்புகளும், பூவரசும்
வெட்கித் தலைகுனிய
மாந்தோப்பில் தின்று
மகிழ்ந்திருந்த காலமது!

சின்னச்சின்ன ஆசையுடன்
சிறகடித்துப் பறந்து தினம்
என்னை கதாநாயகனாய்
எண்ணி நின்ற காலமது!

வெண்மணற் படுக்கையிலே
வெய்யோன் மறைந்தபின்பு
கண்மலர் மூடித்தினம்



களித்திருந்த காலமது!

அலைவந்து கால்களினை
அணைத்து விடை பெற்றிருக்க
மலையோரக் கடற்கரையில்
மனம் லயித்த காலமது!
எந்தக் கவலையுமே
இல்லாமல் நாள் தோறும்
சொந்தமுடன் சுற்றமுடன்
சூழ்ந்திருந்த காலமது!

இந்த நினைவுகள்
ஓர் நாளில்
இடை நிறுத்தம் செய்யப் பட்டது!
எங்கள் மண்ணை
சோகம் தனது செந்தமாக்கிக் கொண்டது!
அத்துமீறி நுழைந்த துப்பாக்கிகள்
ஒரு நாள்



அதிகாரத்தைக் கைப்பற்றின!...
கூவிக் கொண்டிருந்த குயில்களின்
குரல்வளை நெரிக்கப்பட்டு
குருதி குடிக்கப்பட்டது!...
பூட்ஸ் கால்களின் சத்தங்கள்
எனது பூமியை அதிரவைத்தன!...
இழப்பதற்கு எதுவுமில்லாத மக்களின்
இதயங்களில்....
இரும்பு ஆணிகள் ஏற்றப்பட்டன!....
கொலை கொள்ளை கற்பழிப்பு எல்லாம்
கூடி நின்று கைகோர்த்து
கோரத் தாண்டவம் புரிந்தன!
கூடுகள் உடைந்து குஞ்சுகள் பறந்தன!
நாடுகள் மாறின நாட்கள் நகர்ந்தன
வீடுகள் எங்கும் சோகத்தில் நிறைந்தன
காடுகள் மக்கள் வீடுகள் ஆயின!



இந்த நிலைதான் இதுவரை தொடர்ந்தது!
சொந்த மண்ணே தனது சொந்தத்தை இழந்தது!
பஞ்சமும் பட்டினியும் பதவிக்கு வந்தன!
எஞ்சியுள்ள மக்களுக்கு எமனாக மாறின!

எனக்கென்று ஒரு நாடு இருந்தது ஒரு நாளில்
இதயத்தின் அடித்தளத்தில் இன்றுவரை நிலைத்துளது!
கனவுகளில் மட்டுமே நான் காணும் என் நாடு
கடந்த கால நினைவுகளில் கண்களிலே நீர்கோக்கும்!
இந்த நினைவுகளுக்கு இடை நிறுத்தம் வருமா?
இழந்த உடைமைக்கு ஆறுதலைத் தருமா?

எனக்கென்றிருந்த நாட்டின்
இன்றைய நிலையென்ன?....
வானவீதிகளில் வட்டமிடும் பருந்துகளின்
எச்சங்கள் பட்டு
எரிகின்றது என் தேசம்!...
ஊனை மறந்து உணவின்றி வெதும்பி நிற்கும்



மண்ணின் மைந்தர்களின்
மரணங்கள் தொடர்கின்றது!...
வீட்டின் உள்ளேயே வேதனைகள் முகாமிட்டு
காட்டலரி பூத்து நிற்க
காலனவன் கைவரிசை!....
ஏ.கே.யும் கிறனெட்டும் எக்காளமிட்டுநின்று
வீதியோரமெங்கும்
விலைபேசும் பிணவாடை!....
கூலிக்கு வந்தவர்கள் கூடிநின்று கொக்கரிக்க
வேலிகூடப் பயிரையின்று
மேய்கின்ற தத்துவங்கள்!....
மலராத மொட்டுக்கள் மரணத்தின் அணைப்பினிலே
பிணமாக விழுகின்ற
பரிதாபம்! பரிதாபம்!....

இந்த நிலைமைக்கு முற்றுப் புள்ளி வேண்டும்!
எனக்கென்றிருந்த நாடு எனக்கு வேண்டும்!
மனிதங்கள் அங்கே மதிக்கப்பட வேண்டும்!



மனித உயிர்வதை செய்வோர் மிதிக்கப்பட வேண்டும்!
சாதி மத பேதமெல்லாம் சரிய வேண்டும்!
சண்டாளர் கூட்டமெல்லாம் எரிய வேண்டும்!
துப்பாக்கிச் சனியன்கள் தொலைய வேண்டும்!
துர்மரண மேகங்கள் கலைய வேண்டும்!
பேச்சுரிமை எழுத்துரிமை பேண வேண்டும்!
பெண்களது வாழ்வில் ஒளிகாண வேண்டும்!
தனிமனித வாழ்த்துகள் ஒழிய வேண்டும்!
தரங்கெட்ட மனிதரெல்லாம் அழிய வேண்டும்!

காற்றோடு சுதந்திரம் கவி பாட வேண்டும்!
நேற்றைய நிலையெல்லாம் மறந்தாட வேண்டும்!
இந்த நிலையெல்லாம் மாறிவரும் வரையில்
எனக்கு ஒரு நாடு
அது என்னுடனே இருக்கட்டும்.



## தலைவர் தகவுரை

இறந்ததும் நிகழ்வும் சேர்த்தும்
இனிய தன் கனவும் கோர்த்து
செறிந்தசெஞ் சொற்கள் வார்த்து
சிந்தையை மிகவே ஈர்த்து
நிறைந்தெழும் கவிதை தந்தார்
நிலா. குகதாநன் கண்டீர்
அறிந்தமற் றொருபா வாணன்
அருந்திறம் புகழ்வேன் கேளீர்.



## கவிஞர் அறிமுகம்!

ஆடம்பரம் இன்றிப் பல
ஆக்கங்களைத் தந்தோன்
ஏடாம் ‘நிழலை’ கலை ஓங்கிட
இனிதே வெளியிட்டோன்
ஈடில் மொழிப் பற்றும் கவி
நெஞ்சும் இயல்பானான்
பீடு மிகு அல்பேட் மனோ
செய்த கவி தோய்வீர்!

# கவிஞர் அல்பேட் மனோ

வானிலே வட்டமிட்டுப் பறந்திடும்
வான் பறவைக்கும்
பறந்து வந்து தன்
குஞ்சுகளை அரவணைத்து
இரையூட்டி இளைப்பாறிட
ஒரு கூடுண்டு.....

வனத்திலே வாழ்ந்திடும்
வனவிலங்குக்கும்
தங்கியிழைப்பாறவொரு குகையுண்டு...
ஆனால் இன்று
தமிழர் தலை சாய்க்க ஓர் இடமில்லை



அன்று ஏட்டிலே தமிழ்ப் பாட்டிருந்தது.....
தமது சொந்த நாட்டிலே அதைப்
படித்து மகிழ்ந்திட
நம்மினத்திடையே
நற்பண்பிருந்தது....
அதைவிட அதன்படி வாழ்ந்து
அவர்களின் மனிதநேயம்
அருவியாக ஊற்றெடுத்து ஆறாகவோடி
கருணைக் கடலில் சங்கமித்தது....

அவர்கள்
ஆனந்தமாகவே வாழ்ந்து குதூகலித்திட்ட
காலமிருந்தது.....
சொந்த நாடுமிருந்தது...
அதுவோர் தமிழாரின் பொற்காலம்
சங்க காலம்...
சங்கமைத்து நம்மவர்
தமிழ் வளர்த்திட்ட காலமது...



சகலமுமிருந்தது...

தமிழரிடையே
பொன்னிருந்தது. பொருளிருந்து.
பொங்கி வழிந்தது நம் தமிழ் அன்னையிடம்
அதன் மூலம் அரும்பிவிட்ட
திருவள்ளுவரின் திருக்குறளைப் போல்
திடமுடனே நம்மை தட்டியெழுப்புகின்ற பற்பல
தத்துவமுமிருந்தது... ஒழுங்கான
சட்ட திட்டமுமிருந்தது...

அன்று வாழவோர் சொந்த நாடு
இன்றோ வாழ சொந்த நாடில்லை
சொந்தமாக ஓடியுழைத்துத்
தேடிக் கட்டிய வீட்டில்
சுதந்திரமாக வாழ வழியில்லாதது போல
அதற்கு முன் வீடல்ல.... நாடல்ல...
“ஆசியா” ....... “ஆபிரிக்கா”



கண்டங்களைப் போலவே
“லெமூரியா” கண்டமொன்றிருந்தது - அதனை
ஆண்டு அரசாட்சி வகித்த
நம் திராவிட இனத்தவரின்
கண்டமான “லெமூரியாவை” இயற்கை அழிவு
கடல்கோளெனும் வடிவெடித்து
கரைந்து போன குமரிக் கண்டமாயிற்று
இவ்வாறு கரைந்து போய்
எஞ்சியிருந்த நாடும் போய்
இன்று நமக்கென்றதொரு நாடில்லாதவர்களாகி
அதுதான் நாதியற்ற
நடுக்கடலில்
நங்கூரமறுந்த
கப்பலிலே மிதந்து
எத் துறைமுகத்தையாவது அடைந்து
பயணத்தை முடிவுக்கு கொண்டு
வரமுயல்பவன் போல்
நாடற்றவர்களாக வாழ்கிறோம்



இதெல்லாம் எதனால்
தமிழரின் பிரித்தற் குறிகளாக
சந்தர்ப்பவாதிகளாக மாறும்
தமிழர்களால் வந்த வினை
தலையிலுள்ளதை சற்றேனும்
பாவிக்காமலே....
தடுமாறுகின்றோம்
நம்முள்ளே அடிபட்டுக் கொண்டே.....
சொந்த நாடில்லை வாழ்ந்திட...
ஆனால் ஒன்று மட்டுமின்றுண்டு...
இருக்கும் துண்டுக் காணியிலே...

நான்கைந்து கூடாரமிடும்
கோமாளிகளைப் போலவே
தம்முள்ளே அடிபட்ட
மடமையின்றும் தொடர்கின்றது
முடிவில்லாதவோர் தொடர் கவிதைபோல்...
இதற்கு ஒரு முடிவு வேணும்



முடிவு கண்டால்...
தானே பிறந்து விடும்
நமக்கொரு நாடு
அதுதான் நம்மவரின் இன்பவீடு
நாடும் கிடைத்திடும்
அதிலே வாழ்ந்து மகிழ்ந்திடும்
காலமும் வந்து சேரும்...
எப்போது?
நாம் நம்மிடையேயுள்ள பிணக்குகளை
நாமே நமக்குள்ளேயுள்ள
சச்சரவுகளைத் தவிர்த்து
தீர்க்கமானதொரு
தீர்வு காணும் போது
கிடைத்து விடும் நமக்கு ஒரு நாடுநமக்கு
வாழவொரு
சொந்த வீடு போலவொரு நாடு
நமக்கு ஒரு நாடு..................
அதுவே எம் தாய்நாடு............



## தலைவர் தகவுரை

வரலாற்றைக் கிளறி விட்டான்
வந்ததோர் சக்தி மூச்சில்
பெருமானத் தமிழர் இன்று
பிறந்தநல் ஈழ மண்ணில்
சரியாக வாழ்ந்திடாத
சான்றுகள் எடுத்துச் சொன்னான்
பரிதாப நிலையைப் போக்கப்
பரிகாரம் வேறு தந்தான்!



## தலைவர் பாவாரப் பலகாரம்

இத்தனை நேரமாக
    இருந்து நீர் பொறுமையோடு
புத்தெழில் "பொதிகை" ஏடு
    போட்டநற் கவிய ரங்கில்
வித்தகக் கவிஞர் செய்த
    விருந்தினில் பங்குகொண்டு
சித்திரைப் பொங்கல் உண்டீர்
    சிந்தனை பிறக்கக் கண்டீர்.



# வாழ்த்து

தலைமைகள் தமிழ்த்தாய் வாழ்க
தனிப்புகழ் ஈழம் வாழ்க
கலையிதழ் “பொதிகை” வாழ்க
காதலர் இரசிகர் வாழ்க

கலைஞரிற் சிறந்த செல்வர்
கவிஞர்கள் வாழ்க என்றும்
பொலிவுறத் தமிழர் பண்பு
புவிதொறும் வாழ்க வாழ்க!








இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா